JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# அகத்திணையியலில் அன்பின் ஐந்திணைகள்

**முனைவர் கா. அன்பரசு,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635 601,
திருப்பத்தூர் மாவட்டம்.

**முன்னுரை**

தலைமக்கள் இருப்பிடத்தை உரிப்பொருளை ஐந்தாகப் பிரித்து திணை வகுத்துள்ளார் தொல்காப்பியர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனலாம். இந்த அன்பின் ஐந்திணைகளின் சிறப்புகள் என்ன? இந்நிலங்களில் வாழும் மக்களின் இயல்பு மற்றும் சூழல் என்ன? இத்தகைய வினாக்களை முன்வைத்து இக்கட்டுரை ஆய்வாகவும் தேடலாகவும் அமைகிறது.

**குறிஞ்சி நிலம்**

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். இங்கு தலைவன் தலைவி இருவரும் சந்தித்து கருத்திலே ஒன்றுபடுவர். இதற்குக் குறிஞ்சியொழுக்கம் அல்லது குறிஞ்சித்திணை என்று பெயர். இவர்கள் வெளிப்படையாக மணம்புரிந்து கொள்ளும் வரையிலும் அடிக்கடி சந்திப்பார்கள். அவர்கள் இரவிலும் பகலிலும் குறித்த இடத்திலே கூடுவார்கள். ஆண் குரங்குகள் வெடித்த பலாவின் சுளைகளைக் கடித்து மந்திகளுக்கு ஊட்டும், களிறு மூங்கிலை ஒடித்து தன் இணைக்கும் கொடுக்கும், இத்தகைய குறிஞ்சி நிலம் பசுமை நிறத்தால், நறுமணத்தால் வண்பொலியால் ஐம்புலன்கட்கும் இன்பம் அளிக்கவல்லதாய் அமைந்துள்ள நிலை தலைவன் தலைவயின் சந்திப்புக்கு ஏற்றதாகும். தொல்காப்பியர் குறிஞ்சியின் பெரும்பொழுது, சிறுபொழுதுபற்றிக் கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார். **”குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்”**[1] மேலும் **பனிஎதிர் பருவமும் உரித்தான மொழிப”**[2]

குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது பின்பனிக்காலம், சிறுபொழுது யாமம். இப்பொழுதுகளைப் புணர்ச்சிக்குரிய காலமாகக் கருதவர். ஆக, காலச்சூழல், இடச்சூழல், நில அமைப்பு அனைத்தும் அகவுணர்வில் இடம்பெறுகின்றன.

**பாலை நிலம்**

பாலை என்பது தனி நிலம் அன்று. நிலம் வகுத்துரைக்கப்படாத பாலைத்திணைக்கும் காலமே முதற்பொருளாக உள்ளது. தலைவன் தன் தலைவியை மணப்பதற்கு முன்போ அல்லது மணந்த பின்போ பொருள் தேடும் பொருட்டு பிரிந்து போவான் இதுவே பாலை ஒழுக்கமாகும். பாலை எனில் வறட்சி அகத்திணையியலில் பாலை என்ற சொல்லைத் தொல்காப்பியர் எங்கும் ஆளவில்லை. மாறாக அகத்திணையியலில் தொல்காப்பியர் பாலைத்திணையைக் குறிப்பிடக் கையாண்டுள்ள கலைச்சொற்கள் நடுவணது, நடுவு நிலைத்திணை என்பன ஆகும். திணைக் கோட்பாட்டில் பாலைக்கு நிலம் இல்லை என்றாலும் இலக்கிய வழக்கில் நிலம் உண்டு.

**”வேனிலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்**

**காலைந் திருகத் தன்மையிற் இன்றி**

**முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் திரிந்து**

**நல்லியல் பழிந்து நடுங்குதுய ருற்று**

**பாலை என்தோர் படிவங் கொள்ளும்”**[3]

எனச் சிலப்பதிகாரம் கோடை வெப்பத்தால் குறிஞ்சியும் முல்லையும் இயல்பான தம் வளத்ததை இழந்து வறண்ட நிலப்பகுதியாக மாற்றம் அடைந்துவிடும் என்று குறிப்பிடுகின்றது. இப்பாலை நிலத்தில் வெப்பம் மிகுதி. மரங்கள் காய்ந்து கரிந்து நிற்கும். வெஞ்சுரமாகக் காட்சியளிக்கும். மழை இல்லாத கொடிய பாலை நிலத்தில் குடிநீரைக் காண இயலாது. இப்பாலை நிலத்தில் கானல் நீர் என்று மயங்கி யானைகள் அதனைப் பருக நினைக்கும். கொழுத்திருந்த யானைகள் நலத்தை உழும் கலப்பை போல ஊன்றி நலத்தில் கிடக்கும். ஆறலைக் கள்வரின் நடமாட்டம் இப்பகுதிகளில் மிகுதி. வழிப்பறி செய்தல் இவர்களது தொழில்,

**"நடுவு நிலைத் திணையே நண்பகல் வேணிலொடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"[4]**

என்கிறது தொல்காப்பியம். அதாவது பாலைக்குரிய பெரும்பொழுது இளவேனிலும் முதுவேனிலுமாகும். சிறுபொழுது நண்பகலாகும். இந்நிலத்திற்குப் பின்பனியும் உரித்தாகும்.

**முல்லை நிலம்**

காடும் காடும் சார்ந்த இடமும் முல்லையாகும். பிரிந்து சென்ற கணவன் திரும்பும் வரையிலும் அப்படிப் பிரிந்து சென்றதனால் உண்டான துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருப்பாள். இதுவே இருத்தல் ஆகும். இதுவே கற்புடைய பெண்ணின் குணமாகும். இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூறுவதே முல்லைத்திணை அல்லது முல்லையொழுக்கம் என்று அழைக்கப்படுகிறது. காடுகள் கார்காலத்தில் மேகங்கள் கருக்கொண்டு ஒலித்துக் குன்றும். காடும் குளிர மழை பெய்யும். நீரும் நிழலும் மலிந்து கிடக்கும். இந்நிலத்தில் மழைபெய்து முல்லை மலர்ந்து அழகிய காட்சியுடன் மான் தன் பிணையுடன் ஆயர்கள் காட்டிடத்தே சென்று கன்றுகளை மேய்ந்து மர நிழலில் தங்கியிருந்து சூழல்களில் இனிய பாக்களை இசைப்பர். மாலை நேரத்தில் கன்றும் கறவையும் கொண்டு ஆயர்கள் வீட்டிற்குத் திரும்புவர். அவற்றின் கழுத்தில் கட்டியுள்ள மணி அசைந்து அவ்வோசையால் மாலைப்பொழுது தலைவிக்குப் பிரிவுத் துயரத்தை மேலும் அதிகப்படுத்துவதுபோல் அமையும். முல்லைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதுபற்றித் தொல்காப்பியர் **"காரும் மாலையும் முல்லை"[5]** என்கிறார்.

**மருத நிலம்**

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். இந்நிலத்தில் தலைவன் தலைவி இணைந்து நின்று குழந்தைப்பேறு முதலிய செல்வங்களைப் பெற்றுக் குறைவின்றிக் குடும்பம் நடத்துவர். இல்லற தர்மங்களை எல்லாம் இனிது நிறைவேற்றுவர். இந்நிலத்தில் தலைவன் தலைவிக்குள் பிணைக்கு ஏற்படும். இதில் பரத்தையர்பால் அன்பு கொண்டு போவது பரத்தையர் பிரிவு எனப்படும். இந்தக் கூடா ஒழுக்கத்தைக் தலைவி கண்டிப்பாள். இவர்களுடைய ஊடல்கள் (பிரிவு) பாணர்களாலும் விருந்தினர்களாலும் புதல்வர்களாலும் நீங்கும். இவை போன்ற நிகழ்ச்சிகளைக் கூறுவது மருதத்திணை அல்லது மருத ஒழுக்கம் என்றழைப்பர்.

இந்நிலத்தில் எப்போதும் வற்றாத நீரையுடைய ஆறு, கால்வாய்கள், குளங்கள் அதிகமாகக் காணப்படும். நிலமானது விளைபொருள்களைக் குன்றாது நல்கும் தன்மையுடையது. இங்கு வாழும் ஊர்களில் உள்ள வீடுகளில் முற்றங்களில் கன்றுகள் வரிசையாகக் கட்டப் பெற்றிருக்கும். அவை செங்கழுநீர் மற்றும் நெய்தற் பூக்களைத் தின்னும். வெட்ட வெளியில் மணற்பரப்பில் நெற்கூடு வைக்கப் பெற்றிருக்கும். உழைத்த எருமைகள் மருத மரத்து நிழலில் படுத்து உறங்கும். நெல் அரிபவர்களின் பறையொலி கேட்கும். பறவைகள் கலைந்து பறந்து செல்லும். இத்தகைய வளம் நிறைந்த மருத நிலத்தில் வாழ்பவர்களிடையே பொருட் பெண்டிருடன் கூடும் வழக்கம் இருந்தது. அச்சமயம் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஊடல் அதிகமாகும். இந்த ஊடலைத் தீர்ப்பதற்காக வாயில்கள் உதவி புரிவார்கள். தொல்காப்பியர் ஊடல் தீர்க்கும் வாயில்களாக,

**"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,**

**பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**

**கூத்தர், விறலியர் ,அறிவர், கண்டோர்,**

**யாத்த ,சிறப்பின் வாயில்கள் என்ப"**[6]

எனப் பன்னிரண்டு பேர்களைக் குறிப்பிடுகின்றார். கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு பெரும் பொழுதுகளும் மருதத்திற்கு உரியவையாகும்.

**நெய்தல் நிலம்**

கடற்கரையும் அதை அடுத்துள்ள பகுதிகளும் நெய்தல் நிலம். மனைவியைப் பிரிந்து சென்ற கணவனை நினைத்து வருந்துவாள். தன் துக்கத்தை வாய்விட்டுக் கூறுவாள். அவன் இன்னும் வரலில்லையே என்று ஏங்குவாள். அவன் பிரிந்து போவதற்கு முன் சொல்லிய உறுதிமொழிகளை எண்ணியும் உரைத்தும் பழித்தும் வருந்துவாள். இவ்வாறு மனைவி தன் வேதனையை வெளிப்படையாகக் காட்டுதல் நெய்தல் ஒழுக்கமாகும். இந்நிகழ்ச்சிகள் அன்பில் நிகழ்வன. இந்நிலத்தில் பல கானற் சோலைகள் இருக்கும். புன்னை, தாழை, ஞாழல், நெய்தல், பனை முதலிய மர வகைகள் அங்குச் செறிந்து காணப்பெறும். நாரை, அன்றில், கொக்கு போன்றவை கடலிலுள்ள மீனைக் கொத்தி

உண்ணும். கடல் அலை உயர்ந்து தாழ்தலைத் தலைவி பார்க்கும்போது அவளிடம் இரக்க உணர்வு தோன்றும்.

நெய்தலுக்குரிய சிறுபொழுது எற்பாடு. அந்நேரம் இவ்விரக்க உணர்ச்சியை மிகுதிப்படுத்தக் காட்டும். இதனைத் தொல்காப்பியம், **"எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்"**[7] என்கிறது. எற்பாடு என்பது பகற்பொழுதின் பின் கூறாகும்.

**கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள்**

தொல்காப்பிய அகத்திணையியல் முதல் நூற்பாவில் சுட்டிய ஐந்திணைகளைத் தவிர கைக்கிளை, பெருந்திணை ஆகியனவும் அகப்பொருள் திணைகளாகக் கருதப்பட்டன என்பது தெளிவாகிறது. கைக்கிளைக்கு உரியனவாகத் தொல்காப்பியர் மூன்று செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

**"காமஞ்சாலா இளமையோள் உயின்**

**ஏமம்சாலா இடும்பை எய்தி**

**நன்மையும் தீமையும் என்று இருதிறத்தால்**

**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**

**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**

**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"**[8]

என்ற நூற்பாவின் வழி,

1. காமம் சாலா இளமையோன் வயின் ஏமம் சாலா இடும்பை எய்தல்.
2. நன்மையும் தீமையும் என்ற இருத்திறத்தின் தன்னொடும் அவளோடும் தருக்கியக் கூடல்.
3. சொல் எதிர் பெறாது சொல்லி இன்புறுதல் என்ற மூன்றினையும் கைக்கிளைக்கு உரியவை என விளக்கியுள்ளார்.

மேலும் பெருந்திணைக்குரியவனாக நான்கு பேசப்படுகின்றன. அவை,

**"ஏறிய மடல்திறம் இளமைதீர்திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**

**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"[9]**

என இந்நூற்பாவின் வழி,

1. ஏறிய மடல்திறம்
2. இளமை தீர்திறம்
3. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
4. மிக்க காமத்து வாடல்

என்ற நான்கும் பெருந்திணைக்கு உரியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கைக்கிளை களவுச் செயல் பெருந்திணை பெரும்பாலானவை கற்புச் செயல்களாகும். பெருந்திணையின் முதல் கூறு மடல் ஏறிய தலைவன் தன் நிலை கூறுவது, மடல் ஏறித் தலைவியைப் பெற்ற நிலை மொழிவதாகும். இவ்வொழுக்கங்களும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

குறிஞ்சி, பாலை, முல்லை மருதம், நெய்தல், என்னும் இந்த ஐந்திணை நிகழ்ச்சிகளைப்பற்றியே தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. அகப்பொருளைப்பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் ஐந்திணை நிகழ்ச்சிகளையே அழகுபட எடுத்துரைக்கின்றன. ஒத்த பருவம் ஒத்த நிலைமையும் உடைய ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே காதல் மணமாகும். இத்தகைய மனமொத்த தம்பதிகளுக்குள் நடைபெறும் அக நிகழ்சிகளைப்பற்றியே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளும் அமைகின்றன.

இதுகாறும் சுட்டிய அகத்திணை ஒழுகலாறுகளால் சங்க காலத்தில் தலைவன் தலைவியரது வாழ்க்கைமுறை புலப்படுகிறது. ஒரு கட்டுக்குள் அமைந்த கட்டுப்பாடான வாழ்க்கை, நேரம், காலம், சூழல் அதோடு இணைந்து செல்கின்ற தலைவன் தலைவியரது ஒழுக்கங்கள் ஆகியன இவ்விளக்கங்களால் தெரிய வருகின்றன.

**மதிப்பீடு**

- குறிஞ்சி நிலத்தில் காலச்சூழல், இடச்சூழல், நில அமைப்பு அனைத்தும் அகவுணர்வில் இடம்பெறுகின்றன.
- மழை இல்லாத கொடிய பாலை நிலத்தில் குடிநீரைக் காண இயலாது.
- காடும் காடும் சார்ந்த இடமும் முல்லையாகும். பிரிந்து சென்ற கணவன் திரும்பும் வரையிலும் அப்படிப் பிரிந்து சென்றதனால் உண்டான துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருப்பாள்.
- மருத நிலத்தில் தலைவன் தலைவி இணைந்து நின்று குழந்தைப்பேறு முதலிய செல்வங்களைப் பெற்றுக் குறைவின்றிக் குடும்பம் நடத்துவர். இல்லற தர்மங்களை எல்லாம் இனிது நிறைவேற்றுவர்.
- மனைவி தன் வேதனையை வெளிப்படையாகக் காட்டுதல் நெய்தல் ஒழுக்கமாகும்.
- ஐந்திணைகளைத் தவிர கைக்கிளை, பெருந்திணை ஆகியனவும் அகப்பொருள் திணைகளாகக் கருதப்பட்டன என்பது தெளிவாகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம் பொருள் – அகம் இளம்பூரணார் உரை, நூ.952.
2. மேலது, நூ.953.
3. சிலப்பதிகாரம், பாடல் – 11, பா.அ.62-66.
4. தொல்காப்பியம் பொருள் – அகம் இளம்பூரணார் உரை, நூ.955.
5. மேலது, நூ.952.
6. மேலது, நூ.1139.
7. மேலது, நூ.9548.
8. மேலது, நூ.954.
9. மேலது, நூ.996.